சின்னச் சின்னதாய்...

கம்போடியாவில் மாயமான மசினகுடி இளைஞரை மீட்க ஆ.ராசா எம்.பி. கோரிக்கை

உதகை

கம்போடியாவில் காணாமல் போன இளைஞரை மீட்டுத் தரக்கோரி நீலகிரி எம்பி ஆ.ராசா மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

கடிதத்தில் கூறியிருப்பதாவது: உதகை அருகேயுள்ள மசினகுடி பகுதியை சேர்ந்த கிருஷ்ணன் என்பவரின் மகன் ஷியாம் சுந்தர் என்பவர் கம்போடியாவில் தனியார் மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றி வந்துள்ளார்.

அவர் கடந்த டிசம்பர் மாதம் முதல், பெற்றோருடனான தொடர்பில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளார். அவரது செல்போனை கடந்த டிசம்பர் மாதம் முதல் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதனால், அவரது பெற்றோர் மிகவும் வருத்தத்தில் உள்ளனர். எனவே, கம்போடியாவில் பணியாற்றிவந்த ஷியாம் சுந்தர் குறித்து விசாரணை மேற்கொண்டு, பெற்றோருக்கு தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

உதகையில் நாய் கண்காட்சி வரும் 10–ம் தேதி தொடக்கம்

உதகை

உதகையில் நாய்கள் கண்காட்சி வரும் 10–ம் தேதி தொடங்கி 12–ம் தேதி வரை மூன்று நாட்கள் நடக்கிறது.

இதுகுறித்து தென்னிந்திய கென்னல் கிளப் தலைவர் ரஜினி கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது: சவுத் இந்தியன் கென்னல் கிளப் சார்பில் 134 மற்றும் 135–வது நாய்கள் கண்காட்சி உதகை அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் வரும் 10–ம் தேதி தொடங்கி 12–ம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ளது.

முதல் நிகழ்வாக நாய்களின் கீழ் படிதல் போட்டியுடன் கண்காட்சி நடத்தப்படும். சிங்கப்பூரை சேர்ந்த நடுவர் பேட்ரிக் வாங் நாய்களை மதிப்பிடுவார்.மேலும், டாஸ்ஹவுண்ட், கோல்டன் ரீட்டிவர், கிரே டேன் ரக நாய்களின் சிறப்பு கண்காட்சி நடத்தப்படும். இந்தாண்டு இந்தியா முழுவதிலும் இருந்து 52 ரகங்களில் 450–க்கும் மேற்பட்ட நாய்கள் பங்கேற்கின்றன.

இதில், நாட்டு ரக நாய்களான ராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை ஆகிய ரகங்களும் அடங்கும். போட்டியின் நடுவர்களாக பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்த மாரியோ மகசாசே, தைவானை சேர்ந்த அலெக்ஸி, சிங்கப்பூரை சேர்ந்த சின் மின் காக் பணியாற்றுகின்றனர். கண்காட்சியின் இறுதி நாளில், போட்டியில் பங்கேற்ற நாய்களில் ஒன்றுக்கு 'ஆண்டின் சிறந்த நாய்' விருது வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நீலகிரியில் இடி, மின்னலுடன் கன மழை

மேட்டுப்பாளையத்தில் சூறாவளி காற்றுக்கு 20 ஆயிரம் வாழைகள் சேதம்

உதகை / கோவை

நீலகிரியில் இரண்டாம் நாளாக இடி மின்னலுடன் கன மழை பெய்தது. உதகையில் 40.2 மி.மீட்டர் மழை பதிவானது.

நீலகிரி மாவட்டத்தில் வழக்கத்துக்கு மாறாக கடும் வெப்பம் நிலவிவந்த நிலையில், நேற்று முன்தினம் உதகை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மழை பெய்தது.

இந்நிலையில், நேற்று மதியம் சுமார் ஒரு மணி நேரம் இடி, மின்னலுடன் கன மழை பெய்தது. மாலை 4 மணி நிலவரப்படி மாவட்டத்தில் அதிகபட்சமாக உதகையில் 40.2 மில்லி மீட்டர், பாலகொலாவில் 20, கோட நாட்டில் 14, எமரால்டில் 12, பர்லியாறில் 10, கோத்தகிரியில் 9.5, குந்தா, அவலாஞ்சியில் 6, குன்னூரில் 5 மில்லி மீட்டரும் மழை பதிவானது.

மழையின் காரணமாக, குன்னூர் லேம்ஸ் ராக் சாலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரு கார்கள் மீது மரம் விழுந்ததில் அந்த வாகனங்கள் சேதமடைந்தன.

தகவல் அறிந்து வந்த தீயணைப்புத்துறையினர் சாலையில் விழுந்து கிடந்த மரத்தை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். அந்த சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. மழை தொடரும் பட்சத்தில் நீர்நிலைகளுக்கு நீர் வரத்து அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

குன்னூர் லேம்ஸ் ராக் சாலையில் நிறுத்தியிருந்த கார் மீது விழுந்த மரம்.(அடுத்த படம்) மேட்டுப்பாளையம் அருகே சிறுமுகை லிங்காபுரம் பகுதியில் சூறாவளிக் காற்றுக்கு சாய்ந்த வாழைகள்.

இதேபோல், கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் மற்றும் காரமடை சுற்றுவட்டாரப் பகுதிகளில் குளிர் காற்றுடன் நேற்று மிதமான மழை பெய்தது. சிறுமுகை உள்ளிட்ட சில இடங்களில் ஆலங்கட்டியுடன் மழை பெய்ததால் இப்பகுதி முழுவதும் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவியது. சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மழை நீடித்தது. சிறுமுகையில் உள்ள லிங்காபுரம், காந்தையூர் பகுதிகளில் வீசிய சூறைக் காற்றால், அங்கு நூற்றுக்கணக்கான வாழை மரங்கள் சாய்ந்தன.

காரமடை, சிறுமுகை, அவிநாசி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று மாலை பலத்த காற்று வீசியது. தொடர்ந்து மழை பெய்தது. சூறாவளிக் காற்றால் சிறுமுகை, லிங்காபுரம், காந்தவயல் பகுதிகளில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் முறிந்து விழுந்து சேதமடைந்தன. ஒன்பது மாத பயிரான வாழை, அறுவடைக்கு இன்னும் சில வாரங்களே இருந்த நிலையில் சூறாவளிக் காற்றில் சிக்கி முறிந்து வீணானது விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கோவையில் நேற்று மதியம் முதல் இதமான காலசூழல் நிலவியது. குறிப்பாக மதியம் 3 மணிக்கு பிறகு திடீரென பலத்த காற்று வீசத் தொடங்கியது. ஆவாரம்பாளையம், கணபதி, ஹோப்காலேஜ், சிங்காநல்லூர், உக்கடம், கவுண்டம்பாளையம் என மாநகரின் பல்வேறு பகுதிகளில் பலத்த காற்று வீசியது. சாலைகளில் இருந்த செடி, கொடிகளின் இலைகள் காற்றில் சுழன்றடித்தபடி பறந்தன.

பசுமைப்பந்தல் சேதம்

மாநகராட்சி சார்பில், 10 சிக்னல்களில், வாகன ஓட்டிகள் நிழலில் நிற்கும் வகையில் பசுமைப்பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது. நேற்று வீசிய சூறாவளிக் காற்றில் பல இடங்களில் பசுமைப் பந்தல் துணிகள் கிழிந்தன. தொண்டாமுத்தூர், நரசீபுரம் உள்ளிட்ட சில பகுதிகளில் லேசான மழை பெய்தது.

மணப்பந்தல்

திருமணசேவை மையம்

21-55 வயதுள்ள 10/+2/Dip, Deg படித்த சுத்த/ராகு/கேது, செவ்வாய் தோஷமுள்ள பெண்களுக்கு முதல் / மறு மணம் புரிய மணமகன் தேவை. 86085 99444

வரி விளம்பரங்கள்

பொது

விற்பனை

EASYTECH CCTV CAMERA
எங்கிருந்தும் உங்கள் வீடு மற்றும் அலுவலகத்தை மொபைலில் பார்க்கலாம்

இலவச டெமோவிற்கு அழைக்கவும்
கோயம்புத்தூர் 74488 88902
திருப்பூர் 74488 88903
www.easytechcctv.com

கோடைகால விளையாட்டு பயிற்சி முகாம்

உதகை

உதகையில் 10 முதல் 18 வயதுக்குட்பட்ட பள்ளி மாணவ, மாணவிகளுக்கான 15 நாட்கள் கோடைகால பயிற்சி முகாம் தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், நீலகிரி மாவட்ட பிரிவு சார்பில் விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவ, மாணவிகளை ஊக்குவித்து அவர்களின் திறமைகளை வெளிக் கொண்டு வரும் வகையில் 10 முதல் 18 வயதுக்குட்பட்ட பள்ளி மாணவ, மாணவிகளுக்கான மாவட்ட அளவிலான கோடைகால பயிற்சி முகாம் உதகையில் தொடங்கியது.

எச்ஏடிபி திறந்த வெளி விளையாட்டு அரங்கத்தில் தொடக்க நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட விளையாட்டு அலுவலர் இந்திரா தலைமை வகித்தார். இப்பயிற்சி முகாம் மே 13-ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில், உதகை சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த 180-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இம்முகாமில் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து விளையாட்டுக்கான பயிற்சி அளிக்கப்பட உள்ளது. ஹாக்கி போட்டிக்கான பயிற்சி குன்னூர் அறிஞர் அண்ணா மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் நடக்கிறது. இப்பயிற்சி முகாம் காலை 6 மணியில் இருந்து 8 மணி வரையும், மாலை 4.30 மணியில் இருந்து 6.30 மணி வரையும் நடைபெறும். பயிற்சி முடிவில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கண்குடி
சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.
Email: aceosvg_35702.hrce@tn.gov.in அலுவலக தொலைபேசி எண் : 7339464328
E.Code: VIRAT001 ITMS No.35702
ந.க.எண்.1231/2024/ஆ3 நாள் 01.05.2024.
1434ம் பசலி மின்னனு ஒப்பந்தப்புள்ளி திறப்பு அறிவிப்பு
இத்திருக்கோவிலில் முடி கொட்டகையில் சேவார்த்திகளால் காணிக்கையாக செலுத்தப்படும் முடியினை சேகரித்துக் கொள்ளும் உரிமத்திற்கான பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பு எதிர்வரும் 24.05.2024 அன்று MSTC நிறுவன வலைதளம் மூலம் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	உரிம இனம் 1434ம் பசலிக்கு மட்டும் (01.07.2024 முதல் 30.06.2025 முடிய)	ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை	சொத்து மதிப்பு சான்றிதழ் தொகை	சொத்து மதிப்பு சான்று இல்லாவிடில் பதில் செலுத்த வேண்டிய தொகை
1	திருக்கோயில் முடி கொட்டகையில் சேவார்த்திகளால் காணிக்கையாக செலுத்தப்படும் முடியினை சேகரித்துக் கொள்ளும் உரிமம்.	ரூ. 75,00,000/-	ரூ. 50,00,000/-	ரூ. 50,00,000/-

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்: 24.05.2024 காலை 11 மணி முதல் பிற்பகல் 04.30 மணி வரை MSTC வலைதளம் மூலமாக
இருக்கண்குடி: 01.05.2024
உதவி ஆணையர்/செயல் அலுவலர் தலைவர் பரம்பரை அறங்காவலர் குழு
செ.ம.தொ.இ / 1720 / ஒப்பந்தப்புள்ளி / 2024

பல்லடம் அருகே முறைகேடாக செயல்பட்ட கிளினிக்குக்கு 'சீல்'

மேலும் 2 மருந்தகங்களுக்கு பூட்டு

திருப்பூர்

பல்லடம் அருக முறைகேடாக செயல்பட்ட கிளினிக்குக்கு அதிகாரிகள் 'சீல்' வைத்தனர். மேலும், மருத்துவர்கள் பணிக்கு வராததால் கிளினிக்குடன் இணைந்த 2 மருந்தகத்துக்கு பூட்டு போட்டனர்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் பகுதிகளில் முறைகேடாக கிளினிக்குகள் மற்றும் மருந்தகங்கள் செயல்படுவதாக சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு புகார்கள் வந்தன. அதன்பேரில் திருப்பூர் மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குநர் கனகராணி தலைமையில், பல்லடம் காவல் ஆய்வாளர் கவிதா, மருந்து கட்டுப்பாட்டு அலுவலர் ராமசாமி, அலுவலக கண்காணிப்பாளர்கள் ஹரி கோபால கிருஷ்ணன், ரமேஷ்குமார் ஆகியோர் கொண்ட குழுவினர், பல்லடம் லட்சுமி மில்ஸ், காரணம்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கிளினிக்குகள் மற்றும் மருந்தகங்களில் ஆய்வு செய்தனர்.

காரணம்பேட்டை பருவாய் சாலையில் உள்ள ஒரு கிளினிக்குக்கு 'சீல்' வைத்த சுகாதாரத்துறை அதிகாரிகள்.

அப்போது, கிளினிக்குடன் இணைந்து செயல்பட அனுமதி பெற்ற பல்லடம் லட்சுமி மில்ஸ் பகுதியில் உள்ள தாரணி மெடிக்கல்ஸ், காரணம்பேட்டையில்உள்ளவிக்ரம்மெடிக்கல்ஸ், மரியா மெடிக்கல்ஸ் ஆகியவற்றில் தற்போது பணிபுரியும் மருத்துவரின் பெயரை தமிழ்நாடு மருத்துவ நிர்வாக வியல்சட்டத்தின்படி பதிவு செய்யாமல், ஏற்கெனவே பதியப்பட்டுள்ள மருத்துவர்களின் பெயரிலேயே அந்த மருந்தகங்கள் தொடர்ந்து செயல்பட்டது தெரியவந்தது.

இதில் மரியா மெடிக்கலில் மட்டும் தற்போது பணிபுரியும் மருத்துவர் பணியில் இருந்ததால், அந்த நிறுவனத்திற்கு தகுந்த அறிவுரை வழங்கப்பட்டு, தற்போது பணிபுரியும் மருத்துவரின் பதிவுச் சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களுடன் நாளை (மே 6) திருப்பூரில் உள்ள இணை இயக்குநர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

லட்சுமி மில்ஸ் பகுதியில் உள்ள தாரணி, காரணம்பேட்டையில் உள்ள விக்ரம் கிளினிக்குகளில் மருத்துவர்கள் கடந்த 20 நாட்களாக பணிக்கு வராமல் மருந்தகம் மட்டும் இயங்கியது தெரியவந்துள்ளது. இதனால் இந்த 2 மருந்தகங்களும் தற்காலிகமாக பூட்டப்பட்டன. மேலும் தற்போது பணிபுரியும் மருத்துவர்களின் விவரத்துடன் நாளை இணை இயக்குநர் அலுவலகத்தில் ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காரணம்பேட்டை பருவாய் சாலையில் உள்ள மேசியா கிளினிக் மற்றும் மருந்தகத்தில் அதிகாரிகள் சோதனை செய்தனர். அங்குள்ள மெடிக்கல் முறையாக தமிழ்நாடு மருத்துவ நிர்வாகவியல் சட்டத்தின்படி அனுமதி பெறாமல் செயல்பட்டதும், மருத்துவர் மோனிஷா என்பவர் கடந்த ஓராண்டாக அங்கு வருவதில்லை என்பதும் தெரியவந்தது. இதையடுத்து, மேசியா மெடிக்கல்ஸ் மற்றும் அதனுடன் செயல்பட்ட கிளினிக்குக்கு 'சீல்' வைக்கப்பட்டது.

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
இ-ஏல விற்பனை அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.
SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை (ரூபாயில்)	டேவணித்தொகை (EMD) (ரூபாயில்)
கிளை அலுவலகம்: எண்.4/128, தரைத்தளம், சுதந்திரபுரம், சிக்கடசாமிபாளையம் கிராமம், மேட்டுப்பாளையம், தமிழ்நாடு-641301					
1.	1188210050000001 **1.Mrs.சத்தியவாணி,** W/o.Mr.முத்துகுமார், **2.Mr.முத்துகுமார்,** S/o.Mr.ராமசாமி கவுண்டர், இருவரது முகவரி: #254/129, காந்தி நகர் 1, தேக்குப்பாளையம் அஞ்சல், பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641020	(i) 23.07.2021 22.07.2021 அன்றுள்ளபடி ரூ.12,09,254/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஐம்பது நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 12.12.2022 & நேரடியான சுவாதீனம் 04.11.2023	30.03.2024 அன்றுள்ளபடி ரூ.19,70,082.75 (ரூபாய் பத்தொன்பது லட்சத்து எழுபதாயிரத்து எண்பத்திரண்டு மற்றும் பைசா எழுபத்தைந்து மட்டும்)	ரூ.7,61,000/- (ரூபாய் ஏழு லட்சத்து அறுபத்தொன்றாயிரம் மட்டும்)	ரூ.76,100/- (ரூபாய் எழுபத்தாறாயிரத்து நூறு மட்டும்)
சொத்து விவரம் : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட **S.F.எண்.1651/7, (பழைய S.F.எண்.465/2 பகுதி), நத்தம் பட்டா எண்.736, கணபதி கிராமம் என்னும் முகவரியில் பரப்பு 2088 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்** மற்றும் அதனுடன் அனைத்து இதர உபகரணங்கள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். **கதவு எண்.36/30.35/66,** சொத்து வரி எண்.7423,7424. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் திசையில் 43 அடி, வடக்கு தெற்காக வடக்கின் குறுக்கே 11 அடி, கிழக்கு மேற்காக தெற்கு திசையில் 27.5 அடி, வடக்கு தெற்காக கிழக்கு திசையில் 69.5 அடி, வடக்கு தெற்காக மேற்கு திசையில் 56.4 அடி, மொத்தம் **2088 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்.** எல்லைகள்: நடராஜ்-க்கு சொந்தமான சொத்துக்கு வடக்கு, S.F.எண்.1651/5-ல் உள்ள கிழக்கு மேற்கு பொதுவழிப்பாதைக்கு தெற்கு, சந்திரா-க்கு சொந்தமான வீட்டுக்கு கிழக்கு, குமார் மற்றும் நடராஜ்-க்கு சொந்தமான வீட்டுக்கு மேற்கு.				
கிளை அலுவலகம்: எண் 1789-A சக்ரவர்த்தி டவர், திருச்சி ரோடு, ஒலிம்பஸ், ராமசாமி நகர், புலியகுளம், ராம்நாதபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641045					
2.	1186210130000015 **1.Mrs.லட்சுமி,** W/o.சிவகப்பிரமணியன், **2.Mr.சிவகப்பிரமணியன்,** S/o.சோமசுந்தரம், **இருவரது முகவரி,** எண்.11B/1, சம்புக்தா இல்லம், இளங்கோ நகர், ராமசாமி லேஅவுட், ஆவாரம்பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641006	(i) 19.07.2021 18.07.2021 அன்றுள்ளபடி ரூ.27,93,433/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து நானூற்று முப்பத்து மூன்று மட்டும்) (ii) சுவாதீனம் 22.09.2022	30.03.2024 அன்றுள்ளபடி ரூ.43,25,762.46 (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து இருபத்தைந்தாயிரத்து எழுநூற்று அறுபத்திரண்டு மற்றும் பைசா நாற்பத்தாறு மட்டும்)	ரூ.30,78,000/- (ரூபாய் முப்பது லட்சத்து எழுபத்தெட்டாயிரம் மட்டும்)	ரூ.3,07,800/- (ரூபாய் மூன்று லட்சத்து ஏழாயிரத்து எண்ணூறு மட்டும்)
சொத்து விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், தொண்டாமுத்தூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட S.F.எண்.422/1, **வேடப்பட்டி கிராமம்** என்னும் முகவரியில் அளவுகள்: கிழக்கு மேற்காக இருதிசையிலும் 27 அடி, வடக்கு தெற்காக இருதிசையிலும் 36 அடி **ஆகமொத்தம் 972 சதுர அடி நிலம் மற்றும் RCC கட்டிடம், இதில் தரைத்தளம் 932.12 சதுர அடி, முதல் தளம் 738.23 சதுர அடி,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், அதனுடன் மின்சார இணைப்பு மற்றும் தண்ணீர் இணைப்புகள் மற்றும் டெபாசிட் மற்றும் அனைத்து வழிப்பாதை உரிமை மற்றும் அனுமந்த உரிமை, கதவு எண்.21/57D, மதிப்பீடு எண்.2363, SC.No.03-105-010-170 & SC.No.551, அனைத்து இதர உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளவைகள். எல்லைகள்: 4 அடி கிழக்கு மேற்கு ரோடுக்கு தெற்கு, வடக்கு தெற்கு மெயின் ரோடுக்கு கிழக்கு, மீதமுள்ள சொத்துக்கு மேற்கு, சுப்பிரமணியன் சொத்துக்கு வடக்கு. மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது **Mrs.லட்சுமி-க்கு சொந்தமானது (உங்களில் எண்.1-ல் உள்ள நபர்).**				
3.	1186210090000003 **1.முகமது இப்ராஹிம் ப்ருட்ஸ் மற்றும் வெஜிடெபில்ஸ்** (Mohamed Ibrahim Fruits and Vegetables), **அதன் சார்பாக Mr.முகமது இப்ராஹிம், 2.Mr.முகமது இப்ராஹிம்,** S/o.Mr.அபாஸ் முகமது, **3.Mrs.ஆயிஷா நஸ்ரீன்,** W/o.Mr.முகமது இப்ராஹிம், அனைவரது முகவரி: எண்.71, நேரு தெரு, ராம் நகர், கோயம்புத்தூர்- 641009	(i) 01.05.2022 07.04.2022 அன்றுள்ளபடி ரூ.37,50,310/- (ரூபாய் முப்பத்தேழு லட்சத்து ஐம்பதாயிரத்து முன்னூற்று பத்து மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 13.12.2022 & நேரடியான சுவாதீனம் 14.03.2024	30.03.2024 அன்றுள்ளபடி ரூ.46,68,941.96 (ரூபாய் நாற்பத்தாறு லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தொன்று மற்றும் பைசா தொண்ணூற்று ஆறு மட்டும்)	ரூ.42,00,000/- (ரூபாய் நாற்பத்திரண்டு லட்சம் மட்டும்)	ரூ.4,20,000/- (ரூபாய் நான்கு லட்சத்து இருபதாயிரம் மட்டும்)
சொத்து விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார்பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட **T.S.எண்.119, பஜார் தெரு, பொள்ளாச்சி டவுன் வார்டு எண்.6** என்னும் முகவரியில் அளவுகள்: கிழக்கு மேற்காக இருதிசையிலும் 834, வடக்கு தெற்காக இருதிசையிலும் திசையில் 55, பரப்பு **481¼ சதுர அடி காலி நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள 484 சதுர அடி RCC கட்டிடம்** அதனுடன் மின்சார சேவை மற்றும் டெபாசிட்டுகள் மற்றும் அனைத்து இதர வழிப்பாதை உரிமை மற்றும் அனுமந்த உரிமைகள். **கதவு எண்.92/1, T.S.எண்.119,** மதிப்பீடு எண்.8305 மற்றும் இதில் மேற்கு பக்கம் உள்ள பொதுவான பாதி பங்கு, அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு மேற்கு மார்க்கெட் ரோடுக்கு வடக்கு, முகமது ஜாபர் ஷாப்-க்கு மேற்கு, கன்னிகாபரமேஸ்வரி டெம்பிள்-க்கு சொந்தமான ஷாப்-க்கு கிழக்கு, கோபால் சொத்துக்கு தெற்கு. மேலேகுறிப்பிட்டுள்ள சொத்தானது **Mr.முகமது இப்ராஹிம்,** S/o.Mr.அபாஸ் முகமது**-க்கு சொந்தமானது (உங்களில் எண்.2-ல் உள்ள நபர்).**				

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 14.06.2024 காலை 11.00 மணியிலிருந்து மதியம் 01.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 13.06.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 12.06.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன்: Mob: 95512 77444, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன்: Mob: 94455 08743 & Mr.R.புஷ்பகாந்த்: 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனராான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob: 74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824, 25, 26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com
தேதி: 02.05.2024
இடம்: பெங்களூரு
ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

மதிமுகவை மகனுக்காக நடத்துகிறார், வைகோ

திருப்பூர் சு.துரைசாமி விமர்சனம்

திருப்பூர்

மதிமுகவை மகனுக்காக வைகோ நடத்துகிறார் என, மதிமுகவின் முன்னாள் அவைத்தலைவர் திருப்பூர் சு.துரைசாமி தெரிவித்தார்.

திருப்பூரில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வரும் மே 6-ம் தேதி மதிமுக தொடங்கப்பட்டு 31 ஆண்டுகள் ஆகிறது. வாரிசு அரசியலை எதிர்த்து தொடங்கப்பட்ட மதிமுக, இன்றைக்கு அதே வாரிசு அரசியலுடன் வந்து நிற்கிறது. மதிமுக தொடங்கப்பட்டபோது, குமரியில் இருந்து வைகோ தொடங்கிய நடைபயணத்தில் அன்றைய முதல்வர் ஜெயலலிதாவின் ஊழல் ஆட்சி குறித்தும், திமுகவின் வாரிசு அரசியல் குறித்தும் பேசிய பேச்சுகள், நடைபயணத்தின் ஒவ்வொரு ஊரிலும் மக்கள் கூடிய கூட்டத்தை பார்த்த பத்திரிகைகள் திமுக செங்குத்தாக இரண்டாக பிளவுபட்டதாக கருத்து தெரிவித்தன.

1996-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலின்போது மதிமுக, மார்க்சிஸ்ட் கட்சி மற்றும் ஜனதாகட்சி கூட்டணி அமைத்து தோல்வியைத் தழுவியது. அடுத்தடுத்து வந்த மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் அதிமுக, திமுக, பாஜக என மாறிமாறி கூட்டணி வைத்தது.

தற்போதைய மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் வைகோவின் மகன் துரைவைகோ கட்சியில் சேர்ந்து பொறுப்பேற்று 2 ஆண்டுகள் கூட ஆகாத நிலையில் தனிச்சின்னத்தில் போட்டியிட்டுள்ளார்.

மதிமுக வாரிசு அரசியலுக்கு எதிராக தொடங்கப்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும். இன்றைக்கு அதே இடத்தில் வந்து நிற்பது தான் காலமுரண்.

திருப்பூர் சு.துரைசாமி

திருச்சி மக்களவைத் தொகுதியில் வெற்றிபெற்றால், அது திமுக வெற்றியே தவிர, மதிமுக வெற்றியாக கருத முடியாது. 1993-ம் ஆண்டு தங்களை நம்பி வந்த முன்னணி நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் என பலரும் திமுகவில் இணைந்துவிட்டனர். சிலர் அதிமுகவிலும் இணைந்துள்ளனர். பாஜகவில் கூட ஒருசிலர் சேர்ந்துள்ளனர். எனவே, இனியும் எஞ்சிய தொண்டர்களை ஏமாற்றாமல், உங்கள் வாரிசுக்காக கட்சி நடத்தாமல் தாய்க் கழகமான திமுக